# பழனி மாநாடு: ஆன்மீக வரலாற்றில் மிகச்சிறந்த இடத்தைப் பெறும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை முதல் பக்கத் தொடர்ச்சி

வழங்கப்பட்டதை 2000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

★2024 ஆம் ஆண்டு அறுபடை வீடு ஆன்மீகச் சுற்றுப்பயணத்துக்கு 1000 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து. இதுநாள் வரை 813 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

★ அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கு கட்டணமில்லாத முடி காணிக்கை செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், முடி காணிக்கை பணியாளர்களுக்கு மாதம் 5000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

★ தவில், நாதஸ்வரக் கல்லூரி, அர்ச்சகர் மற்றும் வேத ஆகமப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகையாக 3000 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை 24.11.2023 முதல் 4000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பணி புரிந்த 13 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திருக்கோயிலில் பணி புரிந்து பணிக்காலத்தில் மறைவெய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.

★ இதுவரை, திருக்கோயில்களில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,298 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 111 பணியாளர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், ஊக்கத்தொகை உயர்வு செய்தல், தினக்கூலி மற்றும் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 1,298 பணியாளர்களுக்கு பணிநிரந்தரம் வழங்கப்பட்டது. ஓய்வூதியதாரர்களுக்கு தொகை உயர்வும் வழங்கப்பட்டிருக்கிறது இப்படி வரிசைப் படுத்திக் கொண்டே போகலாம்.

ஏதோ திடீர் என்று பழனியில் மாநாடு நடத்தவில்லை; இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து கொண்டுதான் பழனியில் இந்த மாநாட்டை இந்து சமய அறநிலையத் துறை நடத்துகிறது.

**அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்து தரும் அரசு!**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும். அதில் உயர்வு தாழ்வு இல்லை. அந்த நம்பிக்கைகளுக்கு திராவிட மாடல் அரசு எப்போதும் தடையாக இருந்தது இல்லை. அதுமட்டுமல்ல, அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்து தரக்கூடிய அரசாகவும் செயல்பட்டு வருகிறது.

**ஆலய வழிபாடுகளில் தமிழ் மொழி முதன்மை பெற வேண்டும்! திருக்கோயில் கருவறைக்குள் மனிதருக்கிடையே பாகுபாடு காட்டாத சமத்துவம் நிலவவேண்டும்! அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!**

'திராவிட மாடல்' என்பது எல்லார்க்கும் எல்லாம் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து சமூக வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்று விளக்கிக்கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறையையும் மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறோம்.

**இன்று கோயில்கள் சீரோடும் சிறப்போடும் இயங்கிட அடித்தளம் அமைத்த சட்டம்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பழுத்த ஆத்திகரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசரால் இந்து சமய அறநிலையைப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பண்பாட்டுச் சின்னங்களான கோயில்கள் முறையாக பாதுகாக்கப்படவேண்டும், முறையாக செயல்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று சீரோடும், சிறப்போடும் கோயில்கள் இயங்க அடித்தளம் அமைத்தது அந்தச் சட்டம்தான்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் -

★1,355 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள்.

★3 ஆயிரத்து 776 கோடி ரூபாயில் 8 ஆயிரத்து 436 திருக்கோயில்களில் திருப்பணிகள்.

★50 கோடி ரூபாயில் கிராமப்புற ஆதிராவிடர் கோயில்களில் திருப்பணிகள் நடத்தி இருக்கிறோம்.

★ 62 கோடியே 76 லட்சம் ரூபாயில் 27 திருக்கோயில்களில் இராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

★ 80 கோடியே 50 இலட்சம் ரூபாயில் பழனி - இடும்பன்மலை, திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் கோயில்களில் கம்பிவட ஊர்திகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

★ 5 ஆயிரத்து 577 கோடி ரூபாய் மதிப்புடைய 6 ஆயிரத்து 140 ஏக்கர் கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

★756 திருக்கோயில்களில் 'நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்' செயல்பாட்டில் இருக்கிறது. தினந்தோறும் 82 ஆயிரம் பேர் உணவு உண்டு வருகிறார்கள்.

★கோயில் சொத்துகளை அளவிடும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 1 லட்சத்து 59 ஆயிரத்து 507 ஏக்கர் நிலங்கள் நவீன ரோவர் கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டு; 64 ஆயிரத்து 522 கற்கள் நடப்பட்டுள்ளன.

★4 ஆயிரத்து 189 ஏக்கர் நிலம், மீண்டும் கோயில் பெயரில் பட்டா செய்யப்பட்டிருக்கிறது.

இப்போது நான் சொன்னதெல்லாம் மிகவும் குறைவு. நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளை, இந்து சமய அறநிலையத்துறை மூலமாக ஒரு புத்தகமாகவே போடப்பட்டிருக்கிறது. அதில் இருந்து சில வற்றைதான் நான் இப்போது சொல்லியிருக்கிறேன். அந்தப் புத்தகத்தை நீங்கள் எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும். நீங்கள் மட்டுமில்லை; ஊடகத்துறையைச் சேர்ந்த நண்பர்களும் இந்தச் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாட்டு ஆன்மீக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடம் பெறும் மாநாடு!**

அந்தச் சாதனைகளுக்கு மகுடம் வைத்தது போல, பழனியில் நடக்கின்ற இந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு, இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு ஆன்மீக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெறும்!

★ நீதியரசர்கள்

★ மகா சன்னிதானங்கள்

★ஆன்மீகப் பெரியவர்கள்

★சமயச் சொற்பொழிவாளர்கள்

★ தமிழ் இலக்கிய அறிஞர்கள்

★ புலவர்கள்

★ பேராசிரியர்கள்

★ பேச்சாளர்கள்

★ இசைக் கலைஞர்கள்

★ நாட்டியக் கலைஞர்கள்

★பாடகர்கள் - என்று பல்துறை அறிஞர்கள் பழனியில் சங்கமிக்கின்ற இந்த மாநாட்டுக்கு என்னுடைய வாழ்த்துகள்!

**அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!**

ஆலய வழிபாடுகளில் தமிழ்மொழி முதன்மை பெற வேண்டும்! திருக்கோயில் கருவறைக்குள் மனிதருக்கிடையே பாகுபாடு காட்டாத சமத்துவம் நிலவவேண்டும்! அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்கள்.

---

இலக்கிய உலகம் வியக்கும் வகையில் சாதனை படைத்துள்ளவர்!

# கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும்!

## 'தினகரன்' நாளேடு புகழாரம்!

சென்னை. ஆக. 25-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத் தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதையொட்டி 'தினகரன்' நாளேடு தனது தலையங்கத்தில் "கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும்" என்று புகழாரம் சூட்டியுள்ளது.**

இதுகுறித்து 'தினகரன்' நாளேடு 24.8.2024 தேதியிட்ட தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், தி.மு.க. முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சி துறையால் தமிழ் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 179 தமிழ்அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.14.42 கோடி நூல் உரிமைத் தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் கலைஞரின் படைப்புகளும் அணிவகுத்துள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர் 1924ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் பிறந்தார். தனது கடின உழைப்பாலும், அளப்பரிய திறமையாலும், தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் ஆளுமையாக விளங் கினார்.


தினகரன்
ஆகஸ்ட் 24, 2024 சனிக்கிழமை
இனி - நீள்வார்

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், திமுக முன்னாள் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சி துறையால் தமிழ் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 179 தமிழ்அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.14.42 கோடி நூல் உரிமைத்தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் கலைஞரின் படைப்புகளும் அணிவகுத்துள்ளன. கலைஞர் கருணாநிதி 1924ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் பிறந்தார். தனது கடின உழைப்பாலும், அளப்பரிய திறமையாலும், தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் ஆளுமையாக விளங்கினார்.

கலைஞர் இது வெறும் பெயர் மட்டுமல்ல, தமிழ் இனத்தின் தனி முகவரி. பல தலைமுறைகளின் எழுச்சிக்கான திறவுகோல். 5 முறை முதலமைச்சர், 13 முறை சட்டமன்ற உறுப்பினர் என ஒரு தலைமுறை மாற்றத்திற்கு வித்திட்டவர். தமிழ் உணர்வு கொண்ட 14 வயது சிறுவனாக தனது இலக்கிய வாழ்வை தொடங்கிய அவர், 15வது வயதில் 'மாணவ நேசன்' என்ற கையெழுத்து ஏடு நடத்தினார். 18வது வயதில் பேரறிஞர் அண்ணாவின், 'திராவிட நாடு' இதழில் இளமைப்பலி என்ற தனது முதல் கட்டுரை எழுதினார். இது, பெரும் வரவேற்பை பெற்றது.

23வது வயதில் ராஜகுமாரி திரைப் படத்திற்கு முதல் முறையாக வசனம் எழுதினார். 'முரசொலி' என்னும் துண்டு இதழை 1942ம் ஆண்டு வெளியிட்டார். 1960ம் ஆண்டில் அதனை முழுமையான நாளிதழாக மாற்றினார். 80 ஆண்டு காலம் பொது வாழ்வு, 5 முறை முதலமைச்சர் என மக்கள் பணி மட்டுமல்லாமல், கலைஞர் 75 திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை வசனம் எழுதியுள்ளார். 15 புதினங்களை யும், 20 நாடகங்களையும், 15 சிறுகதைகளையும், 210 கவிதைகளையும் படைத்துள்ளார். இதுதவிர, அவர் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களையும் தீட்டியுள்ளார்.

தனி ஒரு மனிதரால் அவரது வாழ்நாள் காலத்தில் இத்தனை இலக்கிய படைப்புகளை வழங்க இயலுமா? என இலக்கிய உலகம் வியக்கும் வகையில் உலகளாவிய சாதனைகள் படைத்துள்ளார். கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து, அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகையாக ரூ.7 கோடியே 76 லட்சம் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இத்தகைய கலைஞரின் அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் கலைஞரின் செழுமையான நூல்களை ஊன்றிப்படிக்க அரிய தொரு வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

சமூக நீதிக்காக அரும்பாடுபட்ட தலைவரும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடியவரும், தமிழுக்கு செம்மொழி தகுதியினை பெற்று தந்தவரும், தனது எழுத்து மற்றும் பேச்சுக்களின் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும். "ஒரு ரூபாய்கூட பெறாமல், கலைஞரின் தமிழை நாட்டுக்கே காணிக்கை செய்திருக்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மற்றும் கலைஞர் அவர்களின் குடும்பத்திற்கு எனது நன்றி. கலைஞர் வாழ்வார் என்பது தெரியும். இனி நீள்வார்" என கவிஞர் வைரமுத்து புகழாரம் சூட்டியுள்ளார். இதுவே, உண்மை.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தமது தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

---

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!



மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

| நாள் | நேரம் | மாநகரம்,ஒன்றியம் பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 25.8.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 11 மணி | புதுக்கோட்டைமாநகரம் | ஜியோபார்க் - அரிமளம் ரோடு-புதுக்கோட்டை |
| 26.8.2024 திங்கட்கிழமை | காலை 10 மணி | விராலிமலைகிழக்கு | அழகுநாச்சியம்மன் திருமணமஹால்,களமாவூர் |
| 26.8.2024 திங்கட்கிழமை | காலை 11 மணி | குன்றாண்டார்கோவில் கிழக்கு - மேற்கு - மத்தியம்,கீரனூர்,பேரூர் | OSP திருமணமஹால்,கீரனூர் |
| 27.8.2024 செவ்வாய்கிழமை | காலை 10 மணி | அன்னவாசல் தெற்கு அன்னவாசல் பேரூர் | அண்ணாதிருமணமஹால்,சார்பதிவாளர் அலுவலகம் அருகில்,அன்னவாசல் |
| 28.8.2024 புதன்கிழமை | காலை 10 மணி | புதுக்கோட்டைதெற்கு புதுக்கோட்டைவடக்கு | பிடாரிஅம்மன் திருமணமஹால்,பெருங்களூர் |
| 28.8.2024 புதன்கிழமை | மதியம் 12 மணி | கறம்பகுடிதெற்கு | SSதிருமணமஹால்,புதுப்பட்டி |
| 29.8.2024 வியாழக்கிழமை | காலை 10 மணி | விராலிமலைமத்திய | ராசு மணியன் தோப்பு. குறிச்சிப்பட்டி |
| 29.8.2024 வியாழக்கிழமை | காலை 11 மணி | விராலிமலைமேற்கு | APR வளாகம்,கடைவீதி,விராலிமலை |
| 31.8.2024 சனிக்கிழமை | காலை 10 மணி | அன்னவாசல் வடக்கு இலுப்பூர் பேரூர் | MKSதிருமணமஹால், இலுப்பூர் |
| 02.9.2024 திங்கட்கிழமை | காலை 10 மணி | கந்தர்வக்கோட்டைதெற்கு கந்தர்வகோட்டைவடக்கு | AITதிருமணமஹால்,கந்தர்வகோட்டை |
| 02.9.2024 திங்கட்கிழமை | காலை 11 மணி | கறம்பக்குடிவடக்கு கறம்பக்குடிபேரூர் | ராஜ சங்கீததிருமணமஹால்,கறம்பக்குடி |

**கே.கே.செல்லபாண்டியன்**

செயலாளர்- புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.

# சாலவாக்கம் ஒன்றியக் கழகக் கூட்டம்!

காஞ்சிபுரம், ஆக.25, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 12 மணிக்கு சமுதாய அரங்கம் பொற்பந்தலில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் என்.எஸ். ரவி தலைமை வகிக்கிறார். வி.ஞானசேகர், ஜெ.சுஜாதா ஜெயராமன், பி.வெ.பால முருகன், ஆர்.வெங்கடசுப் பிரமணி, வி.பாண்டியன், ஐ.பாபுஷரீப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் சிறுவேடல் க. செல்வம் எம்.பி., கெ.ஞான சேகரன், இரா.நாகன், ஞா. ஹேமலதா, கு.வசந்தி கோ. சிவராமன், எஸ்.ஆர்.வெங்கடேசன், ப.சசிகுமார், என். எஸ்.பாரிவள்ளல், கு.துரை வேல், என்.ரவி, ப.கார்த்திகேயன், பெ.மணி, த.சத்திய மூர்த்தி, எஸ்.ரத்தினமாலா, எஸ்.முரளிதரன், எஸ்.ஆர். அப்பாதுரை, எஸ்.பி.நடராஜன், ஏ.அரசு, ஆர்.செந்தில் குமார், கே.கார்த்திகேயன், பி.சுப்பிரமணி, க.பழனி, க.பழனிவேல், சரண்யா அலெக்ஸ், பி.வி.குப்புசாமி, ஜெயமணி முருகேசன், குட்டியம்மாள் பாஸ்கர், கே. மாதவபிள்ளை, பி.முனியன் பிள்ளை, வி.சோலை பிள்ளை, எஸ்அன்புகுட்டி, ஒய்.செல்வராஜ்., கே. கைலாசம், எம்.மணி, வி. விநாயகம், சங்கர் கிராமணி, பி.சேகர், ஆர்.சந்திரா, பவுன் சின்ராஜ், கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

---



நேற்று முன்தினம் (23.08.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகத்திற்கான சுழற்கோப்பையை சட்டமன்றப் பேரவைச் செயலக அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசன் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நேற்று நடைபெற்ற தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டத்தில் கழகப் பணிகள் குறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் உரையாற்றினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன்,மாவட்ட அவைத் தலைவர் ஜி. செல்வராஜ், கோவில்பட்டி நகரச் செயலாளர் கருணாநிதி, கழுகுமலை சுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் கே.ராதாகிருஷ்ணன், பீக்கிலிப்பட்டி முருகேசன்,கருப்பசாமி, சின்ன மாரிமுத்து,மும்மூர்த்தி,நவநீத கண்ணன், செல்வராஜ்,புதூர் ஆர்.ஆர்.கே. ராதாகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.